24th march 1926 opeing of the School with 25 childrens Srimath Swami Vipulanantha and Sachchithananda Rajayogigal officiated at the opening cer- emony.

The Servants of Kataragama Pilgrims Society was inaugurated. With President of the Vivekananda Society as their President (Hon.Mr.A.Mahadeva) a home at forbes Road, Colombo - 10.

## 1927

- ❖ Mahatma Gandhi's visit to the Socity
- ❖ 1st local Manager Vivekananda Vidiyalayam Mr. C.Perumalpillai until 05-7-1929

## 1929

- ❖ Vivekananda book Depot opened on 4th May 1929
- ❖ Religious instruction to the Inmates of the Hendala Leper Asylum (75 Inmates)

## 1930

- ❖ Visit of his Holiness Srimat Swami Saravanandagi to Ceylon in Connection with the opening of the H/Q of the Ramakrishna Mission-During their stay in Colombo the Swamiji and his Collegueswere in the Society till the Ashram at Wellawatte, was opened.

- ❖ First Hindu Religious Examination in 15th February 1930.

## 1931

Padit Jawaharlal Nehru and Srimathie Kamala and Indra Nehru Visited the Society.

- ❖ First anniversary of Sir P.Ramanathan death was celebrated on 13-12-1931

The celebration took the shape of a public meeting held at the town Hall under the auspicious of the society. Mr. A. Mahadeva Presided the meeting and M/s A.E. Kenenman. Francis de Soysa K.C. H.A.P. Sandrasegare K.C George Caldera H.Nalliah and J.V.Chelliah addressed the gathering.

- ❖ Sri P.Ramanthan Oratorial Contest in English was held - Out of the 15 candidates who entered the contest 3 were Chosen at a semi final contest held on 12-12-31 In the final contest Mr.C.S.Kumarakulasinghe was the best speaker and presented with the Ramanathan Gold Medal.

## 1932

The Siddhanatha Paditha and Bala Panditha Examination was conducted by the Society.

Jaffna Saiva Paripalana Sabhai has offered to award a Gold Medal worth Rs. 40/= annually to the candidate who comes 1st in the Siddhantha Panditha Examination.

## 1933

Residential Section Committee since Sept 1st undertaken the management of a hostel.

## 1934

- ❖ Electric Light have been installed at the Society
- ❖ The negotiation began with Ceylon Saiva Paribalana Sabai in May 1933 at last came to a sucessful end on the 5th July 1934. When they lent us a sum of Rs.9000/= at 8% per annum. This enabled to pay off the debt that was due to the estate of the late Mr.S.Olaganathan Chettiar and on which interest at 10% per annum.

- ❖ 34 Hill Street, Colombo

## 1936

- ❖ General Manager Hindu Board of Education has instructed all Hindu Teachers of the 87 Schools under his management that they should co-operate with the Society by presenting children for our Religious Examination.

The Municipality acquired an infinitesimal part of land at the junction of Hill Street, and Van Rooyen Street, and paid Rs.210/= for the land on condition that we built the boundary wall ourselves.

## 1937

The Saiva Paribalana Sabai which was resuscitated during the year is using one of our rooms as their office on a monthly rental of Rs. 17/50. The Society Hall has also been placed at their disposal for meetings.

## 1938

Sithantha Panditha and Balapanditha Examination have been suspended from this year.

1940

The Ceylon Saiva Paribalana Sabai wanted repayment of the sum of the Rs.900/= lent to the Society.

❖ On the recommendation of the select committee appointed at the A.G.M the special General Meeting held on 14-12-1940 authorized the council management to raise a fresh loan and settle the debt due to the Ceylon Saiva Paribalana Sabai.

Accodingly the Society Premises were mortgaged to Mr.S.K.R.Iyer of Colpetty and the debt to the Ceylon Saivaparipalana Sabai was settled on 14-12-1940. The Ceylon Saiva Paribalana Sabai waived the interest due to them from April to December 1940.

## 1943

Fiftieh Anniversary of the Parliament of Religions at Chicago under the joint auspices of the Ramakrishna Mission and the Vivekananda Society the 50th Anniversary of the Parliament of religion at chicago was celibrated at the Society premises on 19th Sept. 1943. Mr.M.S.Aney representative of the Govt of India presided Tributes were paid by the president Mr. S. Natesan M.S.C. Srimath Swami Vipulanandaji Mr. R.L.Perea K.C. (who is one of the few now left in Ceylon who had seen and heard Swami Vivekananda,) Mr.N.K. Choksy and Dr.T. Nallainathan.

❖ Chair for Tamil at the Ceylon University. We are glad to state that the initiative taken by the Society in this connection has born fruit. As a result of the efforts of the Society and other organisation a separate chair has been created at the University for Tamil. It is our good fortune that a scholar of the eminence of Srimath Swami Vipulanandaji has filled the chair. Our thanks are due to the Ramakrishna Mission for permitting the Swamiji to come over to Ceylon and taken up this work in response to our request.

❖ Broadcating on days of Religious Significance to the Hindus.

## 1947

Death of Srimath Swami Vipulanandaji
Dr. Ananda K.Coomarasamy
(Honorary Members of the Society)

### ❖ Anthieshdi Madam

During the course of the last year we have been able to satisfy a long felt need of the Hindu Public in Colombo for a Madam at Mutuwal where they could perform Anthieshdi and other religious ceremonies. We have obtained on lease from Government a land and building at Mutwal and members of the Hindu Public have already began to use the madam for purposes of Anthieshdi.

### ❖ India's new Status.

It was during the period under review that mother India regained her freedom.

The first Indian Governor General His Excellency Sri Rajagopalachari a devout follower and colleaque of Mahatma Gandhi. Ceylon had the good fortune and previlage of receiving this eminent Hindu on two occasions. On his last visit 5 years ago Sri Rajagopalachari appealed to all Hindus to give their fullest support to the Vivekandanda Society. We recall Sri Rajagopalachari fervent appeals to the Hindiu public to assist our Society and thus serve our religion.

## 1950

Saiva Siddhanta Conference.

The Hindus of Colombo enjoyed the unique privilage of witnessing the 44th annual sessions of the Saiva Siddhanta Maha Samajan of Madras held in Colombo on the 7th 8th and 9th January 1950. on an invitation extended to the Samajam by the Society.

## 1951

Hindu Religious and cultural Centre at Colombo Fort. In 1948 the Society to Govt for a Crown land in the fort for establishing a Religious and Cultural centre for the benefit of the thousands of Hindu employed in the fort. On reading an announcement in one of the Dailies that the govt had allocated lands to four Religious Institutions including the Vivekananda Society, a letter was sent to the land commissioner requesting confirmation of the happy news.

## 1952

### Anthieshdi Maham

The building on the Polt of land opposite the Hindu Temple at Mutwal which was acquired in 1947 was washed away by sea erosion and what remains is unsuitable for religious needs.

## 1954

### Golden. Jubilee Celebrations

'The celebration of the Societys' Golden Jubilee on the 16th 17th & 18th March 1954. The celebration were inaugurated by Mrs. Vijayalakshmi Pandit, President of the United Nations Organisation General assembly.

The society has been declared an approved chairty by the Hon. minister of Finance.

## 1955

### All Ceylon Hindu Federation

Proposals for the formation of an All Ceylon Hindu Organisation for the purpose of promoting and safeguarding the general interests and well being of the Hindus of Ceylon was placed before the Society during the year, The council of management which considered these proposals welcomed the movement and decided to join the proposed federation and nominated 15 deligates the Maximum number allotted to any single federating unit - to represent the Society. The All Ceylon Hindu Federation was inaugurated on 6-2-55.

## 1955

### குன்றக்குடி அடிகள் வருகை.

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 1955 ஒக்டோபர் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, சபை மண்டபத்தில்-சைவசித்தாந்த - சாரம் - பற்றிச் சொற்பெருக்காற்றினர்.

**ஹெந்தலை குட்டரோகிகள் இந்துக்கோயில்**

ஹெந்தலைக் குட்ட ரோகிகள் சாலை எல்லைக்குள் ஒரு முருகன் கோயிலைக் கட்ட முடிந்தது. எமது சபையின் வரலாற்றின் பொன்னெழுத்துக்களாற் பொறித்து வைக்க வேண்டிய ஒரு முக்கிய சம்பவமாகும். இக்கோயில் இங்குள்ள துர் அதிட்டமான

இந்துக் குட்ட - ரோகிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். புதிய இக் கோயிலின் கும்பாபிஷேக வைபவம் 18-03.56 குறித்த வைத்தியசாலை நோயாளரினதும் சபை அங்கத்தவர், அபிமானிகள் பலரினதும் முன்னிலையில் சிறப்பாக நடந்தேறியது.

### 1957

**கொழும்பு புதுச்செட்டித்தெரு, 57ஆம் இலக்க ஆதனத்தை வாங்குதல்**

இவ்வாதனத்தை ரூபா 80,000/- வாங்குவதெனத் தீர்மானித்து அதற்கு வேண்டிய நடவடிக்கையெடுத்து இச்சபை இவ்வருடம் ஆற்றிய முக்கிய சாதனைகளில் சிறந்ததொன்றாகும். 11.11.57இல் நடை பெற்ற சபையின் விசேட பொதுக் கூட்டம் இவ்வாதனத்தை வாங்குவதென ஏகமனதாகத் தீர்மானித்தது. இந்த ஆதனம் சபையின் தற்போதைய ஆதனத்தை அடுத்து, அதன் பின்புறமாக '58 பேர்ச்சு' விஸ்தீரணமுடையது.

### 1959

**விவேகானந்தா வித்தியாலயம் நீர்கொழும்பு**

08-10-54இல் 30மாணவர்களுடன் தொடங்கப் பெற்ற நீர்கொழும்பு விவோகானந்த வித்தியாலயம் வளர்மதியென வளர்ந்து இன்று 245 மாணவர்களையும் 7 ஆசிரியர்களையும் தன்னகத்துட் கொண்டதாய்ப் பொலிவு பெற்றிலங்குகின்றது. வித்தியாலயத்தில் பாலர் பகுதி முதல் பொதுக் கல்வித் தராதரப் பத்திர வகுப்பு வரை உண்டு.

### 1960

**பாடசாலைகள்**

கொழும்பிலும் நீர்கொழும்பிலும் சபை யினரால் நடாத்தப்பட்டு வந்த இரு பாடசாலைகளும் சிறந்த தேவையைத் தொடர்ந்து ஆற்றியுள்ளன.

அரசாங்கத்தின் தீர்மானத்திற்கமைய இவ்விரு பாடசாலைகளும் 1.12.60 தொடக்கம் கல்வி அதிகாரியின் முகாமையின் கீழ் கொண்டு வரப்பட்டன.

### 1961

07.06.61இல் சபை மண்டபத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் சபையின் இரு தீரர்களான காலஞ் சென்ற க. பெருமாள் பிள்ளை அவர்களும் க.மதியாபரணம் அவர்களும் நினைவு கூரப்பட்டார்கள்.

### 1962

**விவேகானந்த ஜயந்தி நூற்றாண்டு விழா.**

சுவாமி விவேகானந்தர் அவதரித்த நூறாவதாண்டு சபை மண்டபத்தில் 23.04.62இல் கொண்டாடப்பட்டது. அப்போது புல்லுமலை ஸ்ரீ நல்லரத்தினம் அவர்களால் ஆக்கப் பெற்ற சுவாமியவர்களின் சிலை ஒன்று சபைத் தலைவரால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

**சபையின் வைர விழா**

சபையின் வைரவிழா 24.04.62இல் கொண்டாடப்பட்ட போது அங்கத்தவர் பலரும், அவர்கள் குடும்பத்தாரும் கலந்து கொண்டு தேநீர் விருந்து நடைபெற்றது.

**நடன வகுப்பு**

சபையாரால் நடாத்தப்படும் விவேகானந்த நடனமன்றம் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் உதவியால் கொழும்பு நகரிலுள்ள அநேக பிள்ளைகளுக்கு நடனப் பயிற்சி அளித்து வருகிறது. இப்பொழுது 60 பிள்ளைகள் நடனம் பயிலுகின்றனர்.

### 1963

**நடன வகுப்பு**

விவேகானந்த நடன மன்றம் இவ்வருடம் ஆரம்பத்தில் பரத நாட்டிய ஆசிரியை திருமதி கமலாஜோன்பிள்ளை அவர்களின் வழி காட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. ஏறக்குறைய 85 பிள்ளைகள் நடனம் பயின்று வருகின்றனர்.

### 1967 Festivals at Katharagama

The Seventh Festival at Kataragama and the first Somavaram festivel at Thiruketheeswaram were performed by the Society members.

## 1967

### கைவிடலும் கையளித்தலும்

1948 ஆம் ஆண்டு தொடங்கிச் சபையின் சார்பில் இந்து கலாசார நிலையமொன்றை அமைக்க கொழும்பு கோட்டை பகுதியில் நிலம் ஒதுக்கித் தரும்படி பன்முறை அரசினரைச் சபை கேட்டு வந்தது. பல இந்து சங்கங்கள் அரசினரை நெருங்கி வர யாதேனும் ஒரு சங்கத்திற்கே நிலம் ஒதுக்க முடியுமென்றும், அப்படியாயின் குறித்த அச்சங்கத்திற்கு அரசாங்கம் ஒதுக்கீடு செய்வதைத்தாம் விரும்புவதாகவும், தங்கள் வேண்டு கோளைக் கைவிடுவதாகவும் குறித்த கடிதம் ஒன்று விண்ணப்பதாரச் சங்கங்களிடமும் சபை களிடமும் பெற்றுத் தமக்குத் தெரிவிக்கும் படி எழுதியதன்படி, எங்கள் குறிக்கோளை நிறைவேற்ற, இந்து மாமன்றம் முன்வந்து நிற்பதனால், எமது கோரிக்கையை நாம் கைவிட்டு இந்து மாமன்றத்திற்கே நிலத்தை ஒதுக்கிக் கொடுக்கும் படி விட்டுள்ளோம்.

## 1970

புதிய கட்டடமும் புதுச் செட்டித்தெரு ஆதனமும் மேன்முறையிட்டைக் கைவிட்டு, சமரசமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி ரூபா155000/= நட்ட ஈடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. சாதாரண வருடம் ஆவணிமாதம் 26ம் நாள் 11.9.70 வெள்ளிக்கிழமை. மாலை 5.25 மணியள விலான சுபநேரத்தில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லைச் சபைத் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் நாட்டினார். இக்கட்டத்தைக் கட்டுதற்குரிய ஒப்பந்தம் 21.3.71இல் கைச்சாத்திட்டது.

## 1972

### புதிய கட்டடம்

ஒப்பந்தகாரரிடமிருந்து 04-9-72இல் புதிய கட்டம் கையேற்கப்பட்டது.

### புதிய கட்டடச் சுத்திகரிப்புப் பூசை வைபவம்.

ஆவணி மீ 29ம் நாள் (14-9-72) வியாழக்கிழமை பகல் 10.30மணிமுதல் 12.00மணிவரையுள்ள சுபநேரத்தில் நடை பெற்றது. இவ்விழாவில் விநாயகர் பூசை, வாஸ்துசாந்தி, புண்ணியாகவாசனம், ஹோமம் முதலியன இடம் பெற்றன. அன்றைய தினம் பிரம்மஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள் பிரதம குருவாகக் கடமையாற்றினார்கள். சபைத் தலைவர் திரு.கோ.ஆழ்வாப்பிள்ளையும் பாரியாரும் சபையின் புதிய கட்டடத் திறப்புக்களை மங்கள இசைமுழங்க ஏற்றுக் கொண்டனர்.

### புதிய மண்டபப் புகு விழா

பிரமாதீச வருடம் சித்திரை மாதம் 16ஆம் நாள் (28-4-73) சனிக்கிழமை அப்பர் சுவாமிகள் குருபூசைத் தினத்தன்று மாலை சபைத்தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## 1976

### திருமுறை விழா

திருமுறைவிழாவிலே பலரும் வியக்கத்தக்க முறையில் பண்டைய தமிழ் சைவப் பரம்பரையை நினைவுப்படுத்துவது போலத் திருமுறை ஊர்வலம் இடம்பெற்றது. 29-6-76 அன்று காலை கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திலிருந்து திருமுறை முறைப்படி பூசிக்கப்பட்டு பின் யானை மீது ஏற்றப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டுச் சபையின் மண்டபத்திற் சேர்க்கப்பட்டது. இவ்விழா இரு நாட்கள் இடம் பெற்றது.

## 1985

### சைவாசிரியர் கருத்தரங்கு

சபை ஆற்றி வருகின்ற பணிகளுள் ஒரு புதிய அம்சமாக சைவசமயம் போதிக்கும் சைவ ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று கொழும்பு மாவட்டப் பாடசாலைகளில் 9, 10, 11 ஆம் ஆண்டு வகுப்புகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 1985 மே 17, 18 ஆம் தேதிகளில் நடத்தியது. இக்கருத்தரங்கு கல்வித் திணைக்களத்தின் அனுசரணை யுடனும், இந்துசமய விவகார அமைச்சின் உதவியுடனும் நடைபெற்றது.

## 1986

### சபை வளவில் விநாயகர் ஆலயம்

பிரார்த்தனைக்கென ஓர் ஆலயமைக்க வேண்டும் மென குரோதன ஆண்டு தைத்திங்கள் 12ஆம் நாள் 25-01-86 சனிக்கிழமை காலை 7.45மணிக்கு அடிக்கல் நாட்டு விழா இடம் பெற்றது.

ஆலயத்திற்கான சங்குத் தாபனத்தைக் கௌரவ பொதுச் செயலாளரும் அடிக்கல் நாட்டலைத் தலைவரும் செய்து வைத்ததைத் தொடாந்து, வருகை தந்துள்ள உப தலைவர்கள், பொருளாளர் மற்றும் கூடியிருந்த அனைவரும் கைதொட்டு இக்கால் கோள் விழாவைச் சிறப்பித்தனர்.

## 1987

### சித்தி விநாயகர் ஆலயம்

விநாயகர் பிரதிஷ்டா கிரியைகள் 29-5-87 தொடக்கம் 1-6-87 வரை நடைபெற்றது.

1-6-87 திங்கட்கிழமை பூர்வ பஞ்சமி திதியும் சித்தயோகமும் பூச நட்சத்திரமும் கூடிய சுப நாளன்று உதயக்காலை 5.42 முதல் 6.42 வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் சபையில் புதிய ஆலயத்தில் அருள் மிகு விநாயகப் பெருமானுக்கு சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக்குருக்கள் அவர்களால் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

### பாலர் பாடசாலை

சைவ சமயக் குழந்தைகளுக்கென ஓர் பாலர் பாடசாலை கொழும்பு மா நகரில் இல்லாத குறையை எமது சபை இவ்வாண்டு நிறைவேற்றியுள்ளதென்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கின்றோம். 16-01-87 அன்று காலை 8.00 மணியளவில் சபையின் சீவியகால அங்கத்தவரும் பிரபல வர்த்தகருமான திரு.வி.டி.வி.தெய்வநாயகம்பிள்ளை அவர்கள் குத்து விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

## 1990

### சபையின் ஒப்பனை அறை

ஒப்பனை அறை வேலை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா 10.3.90 மாலை 4.30 மணியளவில் இடம் பெற்றது. சமயச் சடங்கை சிவஸ்ரீ. நா.சோமஸ்கந்த சர்மா, ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் கொட்டாஞ்சேனை, நடாத்திவைத்தார்.

### பண்ணும் பரதமும்

இலங்கைத் தமிழர்களுடைய இசை நடனபாரம்பரியத்தை முக்கியமாகப் பிரதிபலிக்கின்ற இவ்விழா 30.3.90 தொடக்கம் 01.4.90 வரை சபைமண்டபத்தில் இந்து கலாசார தமிழ் அலுவல்கள் இராஜங்க அமைச்சின் அனுசரணையுடன் சிறந்த பாராட்டத்தக்கதொரு நிகழ்ச்சியாக இடம் பெற்றதை மகிழ்ச்சியோடு குறிப்பிடுகின்றோம். இவ்விழாவில் அகில இலங்கை ரீதியாக நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொண்டார்கள். கலை நிகழ்ச்சியோடு இரு நாட்கள் கருத்தரங்கும் இடம்பெற்றது.

## 1991

### பன்னிரு திருமுறை முற்றோதல்

தொடக்க விழா 03-02-91 சபையின் சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் காலை 8.00 மணிக்கு ஆரம்பித்து நடைபெற்றது.

திருமுறை முற்றிலும் ஓத ஆரம்பித்ததைத் தொடர்ந்து டாக்டர்.இ.குகராஜன் அவர்களின் அன்பளிப்பைக் கொண்டு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தொடர்ந்து அறங்காவலர் டி.எம்.சுவாமி நாதன் அன்பளிப்பைக் கொண்டு மீனாட்சி அம்பாள் பிரதிஷ்டை இடம் பெற்றது. மேலும் திருவாளர்கள் க.மயில்வாகனம் எஸ்.பி.சாமி. பி.கருப்பையா, வி.செல்வநாயகம் ஆகியோரின் உதவியினால் சமய குரவர் நால்வரது சிலை இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டது.

## 1990

### தமிழ் அகதிகள்

10.10.90 தொடக்கம், சபை மண்டபத்தில் 500 குடும்பங்கள் வரை அரசாங்கத்தினால் தற்காலிகமாக வைக்கப் பட்டிருக்கின்றார்கள்.

**1993**

**விவேகானந்தரின் சிக்காக்கே பேருரை நூற்றாண்டு விழா.**

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ பேருரை நூற்றாண்டு விழாவின் ஆரம்ப வைபவத்தில் செப்டம்பர் 11ஆம் திகதி கலந்து கொள்ளும் முகாமாகக் கல்கத்தா இராமகிருஷ்ணமிஷன் அழைப்பை பெற்று விவேகானந்தசபை கொழும்பு, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தொண்டர்கள் சுமார் 77 பேர் செப்டம்பர் 7ஆந் திகதி புறப்பட்டு செப்டம்பர் 11 ஆந் திகதி கல்கத்தா நேதாஜ்ஜி அரங்கில் நடைபெற்ற மாபெரும் விழாவில் கலந்து கொண்டனர்.

**1995**

இந்து மாமன்றக் கட்டிடத்திற்கு விவேகானந்த சபை கொழும்பு ரூபா ஒரு இலட்சத்தினை அன்பளிப்புச் செய்துள்ளது.

**1997**

15-1-97 சபையின் வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய திருநாள். சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவின் உச்சக்கட்டமாக சபை முன்றலில் அன்னாரின் அழகிய கம்பீரம் செறிந்த 9 அடி உயரமான திருவுருவச் சிலை இதற்கென சிறப்பாக அமைக்கப்பெற்ற மணிமண்டபத்தில் நிறுவப்பட்டது.

1-3-97 அகில இலங்கை சைவ சமய பாடப் பரீட்சைக்கு விவேகானந்த சபை புதிதாக அறிமுகம் செய்துள்ள பாடப்பரப்பினை அறிமுகம் செய்வதற்கான கருத்தரங்கு, செயலமர்வும் சபை மண்டபத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணி வரை நடைபெற்றது.

**இரண்டாவது கருத்தரங்கம்**

**5-4-97 சனிகிழமை** யன்று இரண்டாவது **ஆசிரியர் கருத்தரங்கு** கண்டி கட்டுகலை ஸ்ரீ **செல்வ விநாயகர்** ஆலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீமீனாட்சி கல்யாண மண்டபத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெற்றது.

**மூன்றாம் ஆசிரியர் கருத்தரங்கம்**

25-5-97 காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 மணிவரை ஹட்டன் ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரியில் சிறப்பாக நடந்தேறியது.

**1998**

(22-11-98 ஞாயிற்றுக்கிழமை) வெகுதானிய ஆண்டு கார்த்திகைத் திங்கள் திருதியை திதியும் மூல நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய நந்நாளில் காலை 8.00 மணிமுதல் 9.30 மணிக்குள்ளாக சபையில் உள்ள சித்தி விநாயகப் பெருமானுக்கு பாலஸ்தாபனம் நடந்தேறியது. பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்களும் ஆலய குருக்கள் சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்களும் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

**1999**

ஸ்ரீ சித்தி விநாயப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் 12-12-99 ஞாயிற்றுக்கிழமை திருவோண நட்சத்திரமும் சதுர்த்தி திதியும் அமிர்தயோகமும் கூடிய சுபநேரத்தில் காலை 8.19 முதல் 9.13 வரையுள்ள தனுலக்கின சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் பிரதஷ்டா கலாநிதி சிவஸ்ரீ. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களால் நடத்தப்பெற்றது.

**2001**

நூறு ஆண்டுகள் நிறைவுக்கான புதிய நான்கு தளக் கட்டிடத்திற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

# கௌரவ பொதுச் செயலாளர்

## சிவஞானச் செல்வர் திரு.க.இராஜபுவனீஸ்வரனின் செய்தி



'' இந்தியா அமரத்துவம் பெற்றநாடு ஆண்டவனைத் தேடுவதிலேயே ஈடுபட்டால் இந்தியா என்றும் வாழும். ஆனால் அரசியலையும் சச்சரவுகளையும் தேடிப் போனால் இந்தியா செத்துவிடும்'' இதுதான் சுவாமி விவேகானந்தர் உலகத்திற்குக் கூறிய இறுதி போதனை இது பாரதத்திற்கு மட்டுமல்ல பாருக்குமட்டுமல்ல ஒவ்வொரு தனிமனிதனையும் நோக்கிக் கூறிய மகாவாக்கியம்.

விவேகானந்த சபை கொழும்பு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் பொழுது அகில உலகமுமே இதனைக் கொண்டாடுகின்றது. காரணம் வங்கத்தின் தங்கம் விவேகத்தின் கொடுமுடி சுவாமி விவேகானந்தர் மறைந்தும் ஒரு நூற்றாண்டு ஆகின்றது. இந்தியாவில் இமயம்வரை உள்ள 120 விவேகானந்த சபைகளும் இதனைப் பரவலாகக் கொண்டாடுகின்றன.

உலகின் மூத்த இந்த விவேகானந்த சபையும், ஓராண்டு காலம் இலங்கையின் பல இடங்களிலும் இவ்விழாவினைக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. வேறுஎந்த சபைக்கும் கிடைக்காத பேறாக, சான்றோர்களின் திருப்பாதம் பதிந்த புனிதம் இதற்குக் கிடைத்துள்ளது. சத்தியத்தின் திருவுருவம் அஹிம்சா மூர்த்தி அண்ணல் மகாத்மா காந்தி, பாரதத்தின் தவப்புதல்வர் பண்டித ஜவஹர்லால் நேரு, அவரது துணைவியார் கமலாநேரு, செல்வமகள் இந்திராகாந்தி, அன்புச் சகோதரி விஜயலட்சுமி பண்டிட், சுவாமி விவேகானந்தருடன் நேரடித் தொடர்பு கொண்டவரும் சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலுமான சக்ரவர்த்தி இராஜகோபாலச்சாரியார் போன்றவர்கள் சபைக்கு வருகை தந்த ஆன்றோர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் இலங்கையின் சிந்தனைச் சிற்பிகளான டாக்டர் ஆனந்த குமாரசுவாமி, பொன்னம்பலம் இராமநாதன், விபுலானந்த அடிகள் போன்றோர்களின் உறவு குறித்தும் பெருமை கொள்கின்றோம்.

சைவத்தையும், தமிழையும் தன்னிரு கண்களாகக் கொண்டு பணியாற்றும் இச்சபையின் பணிகளில் மிக உயர்ந்து நிற்பது எழுபத்திரண்டு ஆண்டுகளாக எத்துணை இன்னல்களுக்கு இடையிலும் தொடர்ந்து நடத்திவரும் சைவசமய பாடப் பரீட்சை, இலங்கை முழுவதிற்கும் இப்பணியைக் கொண்டு செல்லும் ஒரே சபை விவேகானந்த சபையே.

ஆலமரமாகப் படர்ந்திருக்கும் இச்சபையின் பணிகளில் விழுதாக இறங்கி வேர்பிடித்துக் காத்த பெரியோர்களையும், புரவலர்களையும் நன்றியுடன் நினைந்து மகிழ்கின்றோம். அவர்கள் ஏற்றிவைத்த தீபம்தான் நூறாண்டுகளாக ஒளிதந்து நிற்கின்றது, நிற்கும்.

இன்றைய நூற்றாண்டு விழாவினைத் தங்கள் வருகையினால் சிறப்பித்த சிறப்பு விருந்தினர்கள் இந்தியத் தூதுவர், பாரதத்தின் சுதந்திரத்திற்கு வழிசமைத்த இருபெரும் தியாக மரபில் உதித்த ஒளிச்சுடர் கௌரவ கோபால கிருஷ்ண காந்தியவர்களுக்கு விவேகானந்த சபையின் சார்பில் நன்றி நிறைந்த மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கைத் திருநாட்டில் இந்துமதக் காவலனாக இருந்து சமயத்தையும் பண்பாட்டையும் காக்கும் அமைச்சர் கௌரவ தியாகராஜா மகேஸ்வரன் அவர்களுக்கும் உவகையோடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்விழாவினை மங்கலமாக்கிய நாதஸ்வரக் கலைஞர்களுக்கும் பண்ணொன்றிய திருமுறை இசை வழங்கிய சங்கீதபூஷணம் திரு.நவரத்தினம் அவர்களுக்கும் அவரது அணிசெய் கலைஞர்களுக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றி.

சபைப்பணிகள் அனைத்திற்கும் முன்னின்று தாயாகத் தண்ணளி சுரந்து ஆசிநல்கிய சுவாமி ஆத்மகானந்த மகராஜ் அவர்களது திருவடிகளுக்கு எங்கள் பணிவினை சமர்ப்பிக்கின்றோம்.

விவேகானந்த மலரை வெளியிட்டு உரைநிகழ்த்திய நாடறிந்த மூத்த பத்திரிகையாளர், தமிழ்நேசன் திரு.சிவநேசச்செல்வன் அவர்களுக்குச் சிறப்பாக நன்றி கூறுகின்றோம். இம் மலரைத் தொகுத்த சபைப்பொருளாளர் திரு.க.விவேகானந்தன் அவர்களுக்கும் எமது நன்றி.

எல்லாவற்றிற்கும் மேலாக தனது அநுபவத்தினையும் ஆற்றலையும் ஒருங்கிணைத்து அற்புதக் கலைப் படைப்பாக ''சுவாமி விவேகானந்தரை" நமது கண்முன் நிறுத்திய காலசூரி வாசுகி ஜகதீஸ்வரன் அவர்களுக்கும் தனது இனிய குரலால் அதனைப்பரிமளிக்க வைத்த கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களுக்கும் இன்னியக் கலைஞர்களுக்கும் நாட்டிய நாடகத்திற்கு உயிரூட்டிய நாட்டிய கலா மந்திர் மாணவிகளுக்கும் எத்துணை முறை நன்றி கூறினாலும் அது தகும். காரணம் விழாவைப் பொலிய வைத்ததில் பெரும் பங்கு அவர்களுக்கே.

நிறைவாக இந்நூற்றாண்டு விழா சிறக்க உடலாலும் பொருளாலும் நல்லுரைகளாலும் உதவி வழங்கிய அத்தனை உத்தமர்களுக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

எங்கள் எண்ணங்களை எழுத்தாக்கி சிறப்பு அநுபந்தங்கள் வெளியிட்ட பத்திரிகைகளுக்கும் ஊடகத்தினரும் நன்றிகலந்த வணக்கங்கள்.

**சிவஞானச் செல்வர்**
**க.இராஜபுவனீஸ்வரன்**
**கௌரவ பொதுச்செயலாளர்**

**விவேகானந்த சபை**
**கொழும்பு – 13.**

உ
சிவமயம்


# சைவ சித்தாந்த மன்றம், கனடா
# Saiva Sidhdhantha Manram, Canada
1008-50 Elm Drive East, Mississauga, ON, Canada. L5A 3X2
Tel/Fax: (905) 566-4822
Email: tvisuvalingam@yahoo.com


## வாழ்த்துரை

சுவாமி விவேகானந்தர் 1902 இல் இலங்கைக்கு வருகை தந்ததை முன்னிட்டு விவேகானந்த சபை 13-07-1902 தோற்றுவிக்கப் பெற்றது. அன்று தொடக்கம் இச்சபை சைவசமய வளர்ச்சிக்காக ஆற்றிய, ஆற்றி வருகின்ற சைவ சமூகப் பணிகள் மிகவும் உயர்ந்தவை; போற்றிப் பாராட்டப்பட வேண்டியவை.

சைவ மகாநாடுகள் திருமுறை விழாக்கள், சைவ சித்தாந்த மகாநாடுகள் போன்ற பல விழாக்களும், திருமுறை முற்றோதல்களும், சைவ சமூகத் தொண்டுகள் எனப் பலவும் நடத்தி வருகின்றனர். விழா மலர்கள், சைவசமய அறிவைப் புகட்டும் வெவ்வேறு தரங்களுக்கான 'சைவ போதினி'கள், 'சைவ சமயம்', எனப் பல நூல்களும் காலத்திற்குக் காலம் சபையினால் வெளியிடப் பெற்றன.

1929ஆம் ஆண்டு தொடக்கம் அகில இலங்கை சைவசமய பாடப் பரீட்சையை அகில இலங்கை அடிப்படையில் சபையினர் நடத்தி வருகின்றனர். இப்பரீட்சையைக் கனடா சைவசித்தாந்த மன்றமும், 1999 ஆம் ஆண்டு முதல் கனடாவில் நடத்தி வருகின்றது.

சைவநெறியில் பலரையும் ஈடுபடுத்தி உழைத்து வரும், விவேகானந்தசபை, கொழும்பு நூற்றாண்டு கால வளர்ச்சி பெற்றுத் தற்போது நூற்றாண்டு விழாக் காண்பதை அறிந்து சைவ உலகம் பூரிப்பும் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றது.

இச்சபையினைத் தோற்றுவித்த சைவப்பெரியார்களையும், அதனைக் காலத்திற்குக் காலம் திறம்பட இயக்கி வருகின்ற, வந்த சபைத் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் சபை உறுப்பினர்கள் ஆகிய அனைவரையும் நினைவு கூர்ந்து உளமாரப் போற்றி வணங்குகிறேன்.

இச்சபையின் நூற்றாண்டுப் பணிகள் ஒரு தனி வரலாறாகவே எழுதத்தக்கவை. சென்ற காலத்தின் பழுதிலாத்திறம் இனி எதிர்காலத்தின் சிறப்பாக அமைக!

நூற்றாண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெறவும், விழா மலர் திருநெறி செந்தமிழ் மணமும் சிவ மணமும் கமழும்படி அழகுற மலரவும் எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருளைப் போற்றி வணங்கி வாழ்த்துகிறோம்.

ஒரு நூற்றாண்டு கடந்து நூற்றொன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் விவேகானந்த சபை மேலும் வளர்ச்சியுறவும், வலிவுறவும் வாழ்த்துகிறேன்.

சீரிய சைவப்பணியை ஆற்றும் விவேகானந்த சபையினரையும், நூற்றாண்டு விழா மலர் குழுவினரையும் மிகவும் பாராட்டிப் போற்றி வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

தி. விசுவலிங்கம்
28-06-2002

தி. விசுவலிங்கம்
தலைவர்
நிர்வாக ஆசிரியர், **அன்புநெறி**

# THE BIRTH OF VIVEKANANDA SOCIETY

Our predecessors keenly felt the necessity "for a Religious Society for the promotion of Spiritual knowledge among the Hindu young men of Colombo" and a notice dated 18th june, 1902, was circulated among the Hindus covening a meeting on the 13th July 1902., to Inaugurate a Society. In the meantime (on 4-7-02) our revered Swamiji cast off his mortal coil. We invite your kind attention to these facts and dates for reasons which could be apparent later. Here we will allow the First Annual Report to speak for itself :

"The inaugural meeting was held on 13th July, 1902 nine days after the passing of Sirimat Swami Vivekananda and in selecting a name to the Society it was impossible not to connect with it the name of the departed Patriot-sage, the "Conqueror of Chicago" who had done yeoman service to our Religion and the fruits of whose labour are still being gathered in and out of Aryawarta."

A report submitted by the Society on 19th December 1903 says that the Society's object is "the study and dissemination of the Sanantana Dharma (Religion enternal) and the promotion of wisdom. Love and Fraternity" and it was named the Vivekananda Society " in commemoration of the late patriot-sage"

We are compelled to remind you that our religion Sanatana Dharma-is iternal. It was not founded by any man. It is not based upon persons but on principles. There were of course, Rishis (Mantra Drishtas Seers of Thought) and Munis who discovered the mass of knowledge known as the Vedanta and Siddhanta and who gave us the benefit of their discovery; but none of them was the founder is our Religion and none of them claimed our allegiance him personally. There were also Acharyas, great teachers who were born in different times and emphasised on certain phases of our Dharma which required emphasis in their, times. Many of us believe that Swami Vivekanandaji was one of them and revere him as such

# VIVEKANANDA SOCIETY

*Centenery Celebrations*

விவேகானந்த சபை, கொழும்பு.

**1902 - 2002**

அச்சுப்பதிவு : கௌரி அச்சகம் 207, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு -13. தொலைபேசி : 432477